*KALANJIYAM – International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 2456-5148
Vol. 2 No. 03 (2023)

**களஞ்சியம்**
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
**Vol. 2 No. 03 (2023): Kalanjiyam Aug 2023**

# கவிஞர் சிற்பியின் இலக்கிய உலகம்

# The Poet Sirpi's Literary World

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

**ARTICLE INFO**

**Article history**
Received: 11 July 2023
Revised: 15 July 2023
Accepted: 18 July 2023
Published: 01 August 2023

**Peer review**
Double-blind peer review

**Keywords**
Poet Sirpi
Modern Tamil Poetry
Vanampadi Movement
Humanism
Literary Contributions
Translation
Tamil Literature

**ABSTRACT**

Poet Sirpi is one of the distinguished personalities in modern Tamil literature, renowned for his multifaceted contributions as a poet, translator, literary critic, editor, academician, and researcher. Inspired by Mahakavi Bharathiyar, Sirpi has dedicated his literary career to expressing human values, social consciousness, and cultural ideals through his writings. His literary contributions encompass poetry, drama, children's literature, prose, biographies, translations, and literary criticism. His poems explore various dimensions of human life, including love, morality, knowledge, nature, and social responsibility, with humanism serving as their central theme. As an active participant in the Vanampadi literary movement, he played a significant role in shaping modern Tamil poetry. His translations have also enriched Tamil literature by introducing works from other languages. His outstanding literary achievements have been recognized through prestigious honours, including the Sahitya Akademi Award. This article examines the life, literary achievements, creative works, translations, academic contributions, and intellectual perspectives of Poet Sirpi. It highlights his significant role in the development of modern Tamil literature and establishes his enduring place in the history of Tamil literary tradition.

**How to cite this article:** Alibava, U. (2023). கவிஞர் சிற்பியின் இலக்கிய உலகம் [The Poet Sirpi's Literary World]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 2*(3), 18–22.
**Copyright and licence:** © 2023 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

"நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல் இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என வாழ்க்கையைக் கம்பீரமாகப் பிரகடனப்படுத்திக்கொண்டு வாழ்ந்த பாரதியை அடியொற்றி வாழும் கவிஞர் சிற்பி,

எனக்கு அவனே குரு
அவன் எழுத்தே வேதம்
வார்த்தை சட்டம்
கவிதை சத்தியம்

எனத் தம்மை அடையாளப்படுத்துகிறார். பாரதியின் வாழ்வும் வாக்கும் தமக்கு ஆதர்சமானவை என்கிறார்.

கவிதை வானில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாகக் கொடிகட்டிப் பறக்கும் கவிதைச் சிற்பியான கவிஞர் சிற்பி மிகச் சிறந்த கவிஞர். நல்ல மொழிபெயர்ப்பாளர். சங்கைக்குரிய கல்வியாளர். தேர்ந்த இலக்கிய விமர்சகர். இதழாசிரியர். நேர்த்தி மிக்க இலக்கியப் பொழிவாளர். பன்முகம் கொண்ட சிற்பி பொ. பாலசுப்பிரமணியம் நுண்மாண் நுழைபுலம் மிக்க பேராசிரியர். பல்துறை அறிஞர். மொழிபெயர்ப்புக்காகவும் படைப்பிலக்கியத்துக்காகவும் இந்திய அரசின் மிக உயரிய விருதான சாகித்திய அகாதெமி விருதினைத் தமிழ் இலக்கியத்துக்கு இருமுறை பெற்றுத் தந்த பெருமைக்குரியவர்.

இவர் கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் ஆத்துப் பொள்ளாச்சியில் 29.7.1936 அன்று கி. பொன்னுசாமி, கண்டி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். கேரளத்தில் பள்ளிக் கல்வி பயின்றார். 1951ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகரின் கலைக்கோட்டையாகத் தொடங்கப்பட்ட முதுபெரும் புகழுடைய ஜமால் முகம்மது கல்லூரியில் முதல் அணி மாணவராகச் சேர்ந்து இண்டர் மீடியட் பயின்றார். இங்கு தான் சிற்பியின் கவிதை வானம் ஒளிக்கீற்றை வீசத் தொடங்கியது அதற்குக் காரணகர்த்தாவாக அமைந்தவர் இறையருட் கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர் எனச் சிற்பியே பல இடங்களில் சொல்லி மகிழ்கிறார்.

மருத்துவம் பயிலும் வாய்ப்பும் தகுதியும் இருந்தும் ஜமாலில் படித்ததன் விளைவாகத் தமிழையே நாடினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் தமிழ் இலக்கியமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ந்த புலமையுள்ள இவர் உருசிய மொழியையும் பயின்றுள்ளார். 1958 முதல் 1989 வரை பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். 1989இல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும் தலைவராகவும் பொறுப்பேற்றார். 1997 வரை இங்கு சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

கவிதை, நாடகம், சிறுவர் நூல்கள், உரைநடை நூல்கள், வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு, ஆங்கில நூல், பதிப்பித்த நூல் எனச் சிற்பியின் படைப்புலகம் பன்முகம் கொண்டது.

‘ நிலவுப் பூ' (1963)வின் வாயிலாகத் தமிழ்க் கவிதையுலகில் தடம் பதித்த சிற்பி சிரித்த முத்துக்கள் (1968), ஒளிப்பறவை (1971), சர்ப்ப யாகம் (1976), புன்னகை பூக்கும் பூனைகள் (1982), தமிழக அரசின் பரிசு பெற்ற மௌன மயக்கங்கள் (1982), சூரிய நிழல் (1990), ஆதிரை (1992), இறகு (1996), சிற்பியின் கவிதை வானம் (1996), சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஒரு கிராமத்து நதி (1998), தமிழக அரசின் விருது பெற்ற பூஜ்யங்களின் சங்கிலி (1999), பெருமூச்சுக்களின் பள்ளத்தாக்கு (2001), பாரதி கைதி எண் 253 (2002), மூடுபனி (2003), சிற்பியின் கவிதைப் பயணங்கள் (2005), தேவயானி (2005), மகாத்மா (2006) எனும் பத்தொன்பது கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

தேனீக்களும் மக்களும் (1982), சாகித்திய அகாதெமி விருது பெற்ற அக்கினி சாட்சி (புதினம் -1996), சச்சிதானந்தன் கவிதைகள் (1998), ஒரு சங்கீதம் போல (1999), உஜ்ஜயினி (2001), கவிதை மீண்டும் வரும் (2001), வாரணாசி (2005), கிரண்பேடி பற்றிய சாதனைகள் எப்போதும் சாத்தியம் தான் (2006) ஆகிய நூல்களை மொழிபெயர்த்துள்ளதுடன் A Noon in Summer (1996) எனத் தமது கவிதைகளையும் தாமே மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

இலக்கியச் சிந்தனை (1989), மலையாளக் கவிதை (1990) அலையும் சுவடும் (1994), மின்னல் கீற்று (1996), சிற்பியின் கட்டுரைகள் (1996), படைப்பும் பார்வையும் (2001), கம்பனில் மானுடம் (2002), கவிதை நேரங்கள் (2003), மகாகவி (2003) நேற்றுப் பெய்த மழை (2003), காற்று வரைந்த ஓவியம் (2005) மகாகவி பாரதியார் (2006) ஆகிய கட்டுரை நூல்களைப் படைத்துள்ளார்.

திருக்குறளுக்கு உரை வரைந்து திருக்குறள் சிற்பி உரை (2001) என வெளியிட்டுள்ளார். சிற்பி தரும் ஆத்திசூடி (1993), வண்ணப் பூக்கள் எனும் இரு சிறுவர் நூல்களையும் படைத்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை (2006) என உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிற்பி ஆற்றிய ஆய்வுப் பொழிவை அந்நிறுவனம் நூலாக வெளியிட்டுள்ளது.

இராமானுசர் வரலாறு (1999), ம. ப. பெரியசாமித் தூரன் (1999), பாரதரத்தினம் சி. சுப்பிரமணியம் (1999), ஆர். சண்முகசுந்தரம் (2000), சே.ப. நரசிம்மலு நாயுடு (2003), தொண்டில் கனிந்த தூரன் (2008) ஆகிய வாழ்க்கை வரலாற்று நூல்களையும் படைத்துள்ளார்.

மகாகவி பாரதி சில மதிப்பீடுகள் (1982), பாரதி பாரதிதாசன் படைப்புக்கலை (1992), தமிழ் உலா 1,2 (1993), பாரதி என்றொரு மானுடன் (1997), மருத வரை உலா (1998), நாவரசு (1998), பாரதியார் கட்டுரைகள் (2002), மண்ணில் தெரியுது வானம் (2006), கொங்குக் களஞ்சியம் (2006) போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ள கவிஞர் சிற்பியின் நெறியாள்கையில் பதினைந்து மாணவர்கள் முனைவர் பட்டமும் ஆறு மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

இன்றையைப் பாடும் நோக்கில் மானுடம் பாடும் கவிஞர்கள் கோவையில் கூடி 1970இல் வானம்பாடி இயக்கத்தைத் தோற்றுவித்தனர். 'இந்த பூமி உருண்டையைப் புரட்டிவிடக் கூடிய நெம்பு கோல் கவிதையை' இவர்கள் பாடினர். வானம்பாடி எனும் இதழையும் இவ்வியக்கம் நடத்தி வந்தது. இதிலும் சிற்பி ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. இது மட்டுமன்றி அன்னம் விடு தூது, வள்ளுவம், கவிக்கோ ஆகிய இலக்கிய இதழ்களின் ஆசிரியர் குழுவிலுமிருந்து சிறப்பு மிக்க இதழியல் பணிகளையும் ஆற்றியுள்ளார்.

சிற்பி பெற்ற பரிசுகளும் விருதுகளும் ஏராளம். அவை அவர் தம் கவிதையாற்றலின் சான்றாதாரங்கள். இந்துஸ்தான் லீவர் போட்டி முதல் பரிசு (1970), திருவாரூர் இயல் தமிழ்ப் பதிப்பகத்தின் சொல் கட்டுக் கவிஞர் விருது (1990), தமிழக அரசின் பாவேந்தர் விருது (1991), குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்ட கவிஞர் கோ பட்டம், கபிலர் விருது (1992), தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உ. சுப்பிரமணியனார் ஆங்கில நூல் பரிசு (1994), சென்னை முருகாலயாவின் பாஸ்கர சேதுபதி விருது (1995), கோவை நன்னெறிக் கழகத்தின் தமிழ் நெறிச் செம்மல் விருது (1996), சிற்பியின் கவிதை வானம் நூலுக்குத் திருப்பூர்த் தமிழ்ச் சங்க விருது (1997), தமிழ்ப் புலமைக்கான சென்னை கொங்கு நண்பர்கள் விருது (1997), கோவை கம்பன் அறநிலையின் கம்பன் கலைமணி விருது (1998), மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது (1998), ஈரோடு இலக்கியப் பேரவையின் ராணா விருது (1999), கேரளப் பண்பாட்டு மையத்தின் சிறந்த தமிழ்க் கவிஞர் விருது (1999), இருபதாம் நூற்றாண்டின் சிறந்த எழுத்தாளர் விருது (1999), சென்னை அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் பாரதி இலக்கிய மாமணி விருது (1998), பொள்ளாச்சி காஸ்மோபாலிடன் கிளப் வழங்கிய விருது (1999), மதுரைத் தமிழிசைச் சங்கத்தின் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பிறந்த நாள் பரிசு (2000), தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பாரதி விருது (2002), திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் மகாகவி உள்ளூர் விருது (2003), கோவை வடக்கு ரோட்டரி சங்கத்தின் பணியில் மாண்பு விருது (2003), ஜமால் முகம்மது கல்லூரியின் தலைசிறந்த பழைய மாணவர் விருது (2003), கோயம்புத்தூர் மகாகவி பாரதி அறக்கட்டளையின் பாரதி பாவாணர் விருது (2004), கோயம்புத்தூர் அரிமா பாராட்டு விருது (2004), சேலம் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் வாகைச் செம்மல் விருது (2005), ராஜா சர் முத்தையா விருது (2006), கவிக்கோ அப்துல் ரகுமான் விருது (2006), கவிஞர் வைரமுத்து இலக்கிய விருது (2008), தமிழக அரசின் கலைமாமணி விருது (2009) போன்ற பல விருதுகளைப் பெற்றுத் தமிழன்னைக்கு அணிசேர்த்துள்ளார்.

இந்திய அரசின் மிக உயரிய இலக்கிய அமைப்பான சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் குழுவில் இருந்த இவர் இப்போது இதன் தலைவராக இருந்து வருகிறார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், பொள்ளாச்சி இலக்கியக் கழகம், கோவை பாரதிய வித்யா பவன், பல்கலைக்கழக மானியக் குழு, மத்திய அலுவலர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசு செயலர் தேர்வாணையம் ஆகிய பல நிறுவனங்களில் மதிப்புறு பொறுப்புக்களை வகித்து வருகிறார். பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் தொடர்ந்து அறக்கட்டளைப் பொழிவும் ஆற்றி வருகிறார்.

தமிழ் இலக்கியத்தில் விடுதலை இயக்கத் தாக்கம், இடைக்காலக் கொங்கு நாட்டின் சமூக - பொருளாதார அமைப்புகள், கொங்குக் களஞ்சியம் போன்ற பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆய்வுப் பெருந்திட்டப் பணிகளையும் செய்து முடித்த பெருமை இவருக்கு உண்டு.

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியிலும் பாரதியார் பல்கலைக்கழகத்திலும் தாம் பணியாற்றியபோது பல கருத்தரங்குகளை நடத்திய பெருமைக்கும் உரியவர் இவர். சிறப்பு அழைப்பாளராக பல்கேரியா (1983), சோவியத் யூனியன் (1983), அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் (1997). மலேசியா, சிங்கப்பூர் (1999) போன்ற அயல்நாடுகளுக்கும், மும்பை கொல்கத்தா, புதுதில்லி, பெங்களூர், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கங்களுக்கும், துஞ்சன் பறம்பு ஆசான் நினைவிடம், கேரள சாகித்திய அகாதெமி, கர்நாடக சாகித்திய அகாதெமி, சாகித்திய பரிஷத், சிரவண பெலகோலா மகா மஸ்தாபிடேகக் குழு ஆகிய அமைப்புகளுக்கும் சென்று வந்த சிறப்புக்குரியவராகச் சிற்பி விளங்குகிறார்.

கவிதை வளமும் கருத்து வளமும் மிக்க சிற்பியின் கவிதைகளைக் குறித்த பல்வேறு ஆய்வு நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் தே. ஞானசேகரனின் சிற்பியின் படைப்புக்கலை, சிற்பி மரபும் புதுமையும், சி.ஆர். ரவீந்திரனின் கோபுரத்தில் ஒரு குயில், இரா. சந்திரசேகரனின் கவிஞர் சிற்பி கருத்தியல் வளம், கவிஞர் சிற்பி கவிதை வளம், கவிஞர் சிற்பி கவிதைக்குள் ஒரு பிரபஞ்சம், மா. நடராசன், மதியழகன் ஆகியோரின் சிற்பியின் படைப்புலகம், ப. மருதநாயகத்தின் Sirpi Poet as Sculptor ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

சிற்பியின் கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், இந்தி, மலையாளம், மராத்தி போன்ற பிற மொழிகளிலும் வெளிவந்துள்ளன. சாகித்திய அகாதெமி, ஞானபீடத் தொகுப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

சிற்பியால் 1996இல் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழின் தலைசிறந்த கவிஞர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்துப் பரிசளித்து வருகிறது.

எதைச் சிந்தித்தாலும் அதற்குப் பாரதியில் விடை தேடும் பாரதி பற்றாளர் சிற்பி. பாவேந்தர் பாரதிதாசனின் பாராட்டையும் பெற்றவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகின் ஈடு இணையற்ற கவிஞரான சிற்பியின் கவிதைகளில் அன்பியல், அறவியல், அறிவியல், இயற்கையியல் ஆகிய அனைத்தும் இருந்தாலும் அடிநாதமாக மனிதம் இழையோடுகிறது. மானுடம் பாடும் வானம்பாடியான சிற்பி தமிழ்ச் சமூகத்தையும் தமிழ் இலக்கியத் தையும் இன்றளவும் கூர்ந்து நோக்கி வருபவர். முதுபெரும் புகழுடைய கவிஞர் சிற்பிக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைபேறுடைய இடம் உண்டு என்பதில் ஐயமில்லை.